RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2224

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# சித்தர் மரபும் சீரிய வாழ்வும்

கு. பிருந்தா [அ, *]

[அ] தமிழ்த்துறை, வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மைக் கல்லூரி, கரூர்-639003, தமிழ்நாடு, இந்தியா

# The Legacy and Noble Life of Siddhas

K. Brintha [a, *]

[a] Department of Tamil, Valluvar College of Science and Management, Karur-639003, Tamil Nadu, India
*Corresponding author Email: rjsbrintha@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2224
Received: 12-02-2022; Revised: 13-05-2022; Accepted: 16-05-2022; Published: 21-05-2022

**Abstract:** Siddhas are full of supernatural powers. They can even be said to be the reincarnation of God on earth. It is because of their grace, devotion, and spiritual feelings towards the great deity. Moreover, the way they alleviate the suffering of the people and the living realities that happened and are happening in their lives are projected before their eyes. They have lived with the power to permanently remove people's diseases, abandoned by doctors. That is why the Siddhas are considered to be the reincarnations of God. The Siddhas are those who have suppressed the will and studied the movement of the world, the universe, the power of God, the philosophy of life, and the secret of the universe. So, Siddhas are those who live naturally with nature and know nature completely.

**Keywords:** Siddhar, Siddhu, God, Nature

## முன்னுரை

சித்தர்கள் ஆன்மிகவாதிகள்! - ஜீவனில் சிவத்தை காணுபவர்களே சித்தர்கள்,

“சிவனென்ன சிவனென்ன வேறில்லை

சிவனார் சிவனாரை அறிந்திட்டபின்

சிவனார் சிவனாராவிட்டாரே”

இங்கு சித்தர்கள் ஜீவன் என்பது அறிவு, அவ்வறிவும் சிவனும் ஒன்றுதான். அறிவே கடவுள் என்று குறிப்பிடுகின்றார். இன்றளவும் பல சித்தர்கள், திருவண்ணாமலை போன்ற ஆன்மிக ஸ்தலங்களில் வாழ்ந்து வருவதும், பலர் கண்ணுக்குத் தெரியாமலேயே இருந்து வருவதாகவும் நம்பப்படுகிறது.

சித்தர்கள் என்பவர்கள் யார்? அவர்களது நோக்கம் என்ன? நாமும் சித்தராக முடியுமா? இது பலருக்கு கேள்வி எழுவதுண்டு. சித்தத்தை அடக்கி, உலக இயக்கத்தை, பிரபஞ்சத்தை, இறை ஆற்றலை, உயிர் தத்துவத்தை, பிரபஞ்ச ரகசியம் என அனைத்தையும் ஆராய்ந்து அறிந்தவர்களே சித்தர்கள். ஆக இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்து, இயற்கையை முற்றிலும் அறிந்தவர்களே சித்தர்கள்.

## தன்னையறிதல்

மனிதன் முயன்றால், சித்தர் வழி நடந்தால் அவனும் சித்தனாகலாம் என்பதே உண்மை. ஏனெனில், சித்தர்களும் மனிதனாகத் தோன்றி இவ்வுலகில் வாழ்ந்தவர்களே. ஆனால் இக்கலிகாலத்தில்,

அது மிக்கடினமான ஒன்றாகும். அந்த சித்தர்களை, குருவாக ஏற்று அவர் வழி நடப்பவர்களுக்குக் கூட அது ஓரளவு மட்டுமே சாத்தியம். இதைத் தான் திருமூலர் தன் பாடல் வழி மொழிகின்றார்.

"தன்னை அறியத்

தனக்கொரு கேடில்லை

தன்னை அறியாமல் தானே

கெடுகின்றான்

தன்னை அறியும் அறிவை

அறிந்த பின்

தன்னையே அர்ச்சிக்கத்

தானிருந்தானே!

என்கிறார் (Vasantha Kumar, 2016).

அகத்தியரும் சித்தராவதற்கு முதலில் தன்னை அறிந்து பின் இவ்வுலகையும், இயற்கையையும் முழுமையாக அறிந்து கொள்தல் ஆகும் என்கிறார்.

"மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டா

மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மை யாமே!"

என்கிறார் (Mahalakshmi, 2014).

சித்தர் என்பவர் உயர்ந்த நிலையை அடைந்தவர் என்பதை இவ்வடிகள் மூலம் அறிந்துக் கொள்ளலாம். அவ்வாறு இவ்வுயர்ந்த நிலையை அடைவதற்கு முதலில் தன் மனதை அறிந்து, பின் தன்னை அறிந்து, அடுத்து இறையை அறிந்து இறுதியில் சித்த நிலைக்கு உயரலாம் என்பது தெளிவு.

சித்தர்களின் வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பது என்பது மனிதனுக்கு மிகவும் கடினமான செயலாகும். இம்முறையை கடைபிடிக்காது மனிதனாக வாழ்பவர்கள் என்ன செய்வது? வாழ்வில் ஏற்படும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் எவ்வாறு தம்மைக் காத்துக் கொள்வது? யார் உதவுவார்கள்? ஏனெனில், மனிதனாக பிறந்த ஒவ்வொருக்கும் நிழலாய் தொடர்வது ஊழ்வினை. ஆகவே ஊழ்வினையை அனுபவிக்க வேண்டும் என்பது விதி.

சித்தர்கள் மனிதர்க்கு வலியுறுத்துவது உண்மை, நேர்மை, கருணை, அன்பு, தூய்மையான வாழ்க்கை மட்டுமே, மற்றும் நல்ல எண்ணம், நற்செயல், நற்சிந்தனை உடையவர்களுக்கு சித்தரின் அருள் நிச்சயம் கிடைக்கும்.

## சித்தர்களும் சித்தும்

யார் இந்த சித்தர்கள் என்ற வினாவிற்கு விடை கண்டால் நான் சித்தர்களின் முழு இரகசியங்களுக்கும் நாம் விடை காண முடியும்.

சித்தர்கள் "சித்து" நிறைந்தவர்கள். அதாவது கண்ணுக்கு புலப்பட்டும் படாமலும் வாழ்பவர்கள், பல அதிசயங்களிலே வாழ்பவர்கள். சொல்லப்போனால் "சித்தர்கள் காற்றின் சக்தியில் ஆதிதமாய் உணரப்படுபவர்கள்". இவர்களின் சஞ்சரிக்கும் ஸ்தலம் (வாழ் இல்லம்) என்று பார்த்தால் மலை குகைகளும், வனங்களும், காடுகளுமாகவே இருந்திருக்கின்றது (Visvasirashni, 2012).

காரணம், எந்த இடையூகளுமின்றி தன்னை அறிந்து கொள்ளும் உயரிய கொள்கையுடைய 'தியானம்' செய்வதையே முழு நேரமும் மட்டுமின்றி மாதங்கள், காலங்கள் வருடங்கள் பல எனவும் அடுக்கிக்கொண்டே போகலாம். அந்த அளவிற்கு "ஆபூர்வ சக்தியும், மனிதனுக்கு நன்மை உணாந்து, அவனுக்கு அளிக்க வேண்டும்" என்ற உயரிய பண்பும் நிறைந்தவர்களாக வாழ்ந்துள்ளனர்.

இவ்வுயரிய பண்புடைய சித்தர்கள் காணவேண்டும் என்ற உந்துதலும் ஆர்வமும் உடையவர்கள், சித்தர்கள் தரிசனம் பெற வனப்பகுதிக்கு செல்கின்றவர்களின் நோக்கமும் எண்ணமும் பக்தியும் தூய்மையாக இருப்பின் ஏதோ ஒரு வடிவில் சித்தர்களின் தரிசனம் சித்திக்கும் என்ற கருத்து நிலவியுள்ளது. அவர்களின் அருள் நமக்கு முழுமையாக கிடைக்க நம் தகுதி, ஆத்ம சாதனையும் தூய்மையுமே ஆகும்.

இவர்கள் வாழிடங்கள் மலை, வனம், காடு என அமைந்திருந்ததனால் பற்பல ஆபத்துக்கள் நிறைந்த சூழ்நிலைகளுக்கு மத்தியில் அமைந்திருந்ததனால். "உணவு, மருந்து" இரண்டினுக்கும் இயற்கை செடிகள், காய்கள், கனிகள், வேர்கள் என இவற்றில் சில உணவாகவும் நோய் தீர்க்கும் மருந்தாகவும் கண்டறிந்து, தனக்கு உதவியது மீறி உலக மக்கள் அனைவருக்கும் பயன் பெற வேண்டும் என்ற உயரிய பண்பும் கொள்கையுடனே தமது பாடல்களில் சூட்சுமமாக பாடி மறைத்துள்ளனர்.

நம் உடம்பு பரமாத்மா என்றும் ஆகவே, கடவுள் எங்குள்ளான் என்று அலைய வேண்டியதில்லை. உடம்பை பேணுவதே கடவுட் பணி, உடம்பினுள்ளே பரமாத்மாவைக் கண்டு மகிழ்ந்திரு இது இந்தக்கொள்கை. ஒன்பான் ஓட்டைகளால் ஆனது நம் உடம்பு என்பதை பாடல்களில் ஒளித்து வைத்து பாடியிருப்பதையும் காணலாம். மேலும் உடம்பின் ரகசியங்கள் "காய கல்பம் என்று எத்தனையோ அம்சங்கள் சித்தர் பாடல்களில் இடம்பெற்றுள்ளதை" காணலாம். புத்தர் தியான முறைகளை வகுத்தார்களோ, அதைப்போலவே சித்தர்களும் தங்கள் உள்நிலை அனுபவத்தை வைத்தே குண்டலினி சாதனை குறித்து எழுதினார்கள் என்ற கருத்து நிலவுகிறது.

## சித்தன் போக்கு சிவன் போக்கு

சித்தர்களின் பரமகுரு சிவன், முக்தி, கொடுப்பவர் அவரே. மனித பிறவி முக்தி பெற இறைவனால் கொடுத்த வரம் பெற்ற பிறவி மனித பிறவி என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கின்றர். ஆகவேதான் அவர்கள் சிவனை குருவாக வைத்து இமைப்பொழுதும் சிவநாமத்தை உச்சரித்து சிவன் வழியே சென்றிருக்கின்றனர். ஊழின் பயனை அறிந்து முக்திக்கான சிறந்த வழி சிவ நாமம் என்பதை உணர்ந்தவர்கள் எனலாம்.

## சித்தர் - மருத்துவக்கொள்கை

சித்தர்கள் "சித்து" தெரிந்திருந்தனார் என்பதனால் எனவே இயற்கை மூலிகைகள் பற்றிய முழு படிமங்களையும் தெரிந்து வைத்திருந்தனர். அதுமட்டுமின்றி ஒரு படி மேலே சென்று மூலிகை வேர் ஒவ்வொன்றிற்கும் ஒரு தேவதையின் அம்சம் உண்டு என்றும், அந்த தேவதைக்குரிய மந்திரம் என்ன, அம்மந்திரத்தைப் பிரமோகம் செய்கையில் உடம்பில் சூரிய நாடி ஓட வேண்டுமா சந்திர நாடி ஓட வேண்டுமா என்பதை அவர்கள் நான்கு அறிந்திருக்கின்றனர்.

மேலும், சூரிய நாடியை சந்திர நாடிக்கும், சந்திர நாடியை சூரிய நாடிக்கும் மாற்ற சில ஆசனங்கள் உண்டு. அந்த விதமாக தேவையான நாடியை ஓடச் செய்து அம்மூலிகையை சரியான முறையில் உபயோகம் செய்து தங்கள் மந்திர ஜபத்திற்கோ தியானத்திற்கோ பயன்படுத்துயிருக்கின்றனர்.

"நமது உடலில் ஏறத்தாழ எழுபத்திரண்டாயிரம் நாடிகளின் இயக்கம் உயிர்ச்சக்தியாகிய பிராண வாயுவை ஏந்திக்கொண்டு தேகமிமங்கும் வியாபித்துச் செல்கிறது" (Jegatha, 2012).

செடிகளையோ அல்லது அவற்றின் இலைகளை கிள்ளிபோடும் போதோ அல்லது மரங்களை வெட்டும் போதோ நமக்கு மனது வலிக்கும் தன்மை உள்ளது. அதற்கு காரணம் என்னவென்று கூறமுடியாத நிலை என்றே சொல்லலாம். அதற்கு காரணம் நாம் இன்னும் சித்தர் நிலை அடையவில்லை என்றே தான் கூற வேண்டும். காரணம், அவர்கள் தான் மூலிகையை செத்த மூலிகையா அல்லது உயிருள்ள மூலிகையா என்ற வினாவை எழுப்பி புரிய வைத்திருக்கின்றனர்.

ஒவ்வொரு மூலிகை வேரிலும் ஒரு தேவதை இருக்கிறார் என்றும், அந்தி மூலிகை பறிக்கப்படும் போது, மூலிகையில் குடி கொண்டிருக்கும் தேவதை வெளியேறி விடாமல் அம்மூலிகையிலேயே குடிகொண்டிருக்க வேண்டும் அதற்கென்று தனி பூஜை செய்திருக்கின்றனர்.

மூலிகையிலிருந்து தேவதை வெளியேறாமல் இருக்கும் பொருட்டு, அதற்கான காப்பு, அர்ச்சனை, மூலிகைக்குரிய பீஜாட்சரம், மந்திரம், ஒலிகள், பஞ்சாட்சுரம் என்று சூட்சுமங்களை பயன்படுத்தி மூலிகையிலிருந்து தேவையான பகுதியை எடுக்கப்படும் போது அந்த மூலிகை முழு உயிர்ப்புத் தன்மையுடன் நிகழும் என்று கூறியிருப்பதை காணமுடிகின்றது.

இவ்வாறு மருந்தாக பயன்படுத்த படும் மூலிகைக்கு காப்பு அவசியம் என்றும், காப்பு இல்லாமல் எடுப்பது வெறும் தாவரமே என்று ஆணித்தரமாக மொழிகின்றனர் என்பது சித்தர்கள் வாக்கு. மேலும் இவ்வாறு எடுக்கப்படும் மூலிகைகளை சித்தர்கள் தங்களின் ஜபத்திற்கும், தியானத்திற்கும் பயன்படுத்தியுள்ளனர்.

மூலிகையை பறிக்கும் போது மட்டுமின்றி பயனுக்கு எடுத்துக்கொண்டு மற்றவற்றை நடுகிறபோது கூட மூலிகை தேவதைக்கு காப்பு செய்து தேவதையைத் தூண்டி நடும் போதுதான் அம்மூலிகை முழுமையான சக்தியுடன் திகழ்கிறதாம் என்பது புலனாகின்றது.

மற்றுமொரு மூலிகைப் பற்றிய செய்தி அறியும் போது பெரும் வியப்பாக உள்ளது. இவ்வரிய வகைப்பட்ட பெரும் வியப்பாக உள்ளது. இவ்வரிய வகைப்பட்ட, பெரும் உதவிபுரியம் இம்மூலிகையின் மகத்துவம் தெரியாதவர்களுக்கோ அதனை வெறும் சுயநல நோக்கில் பயன்படுத்த வேண்டும் என்று எண்ணுபவர்களும் இம்மூலிகை கண்ணில் படவோ செய்யாதாம் என்பதை உற்றுநோக்கும் போது பெரும் திகைப்பாக நிஷ்தானிப்பாக உள்ளது.

மேலும் ஒரு செய்தி மூலிகைகளுக்குக் காவல் உண்டு என்றும் சில அரிய மூலிகைகளை நாகங்கள் காவல் காக்கும் என்றும், இந்த நாகங்களுக்கும் சித்தர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்ற செய்தியையும் சித்தர்களை பற்றி அறிந்துக் கொள்ளும் போது தெரிந்துக் கொள்ள முடிகின்றது.

சிலவகை மூலிகைகளை அருகில் இருக்கும் சில தாவரங்கள் பாதுகாக்கும். இத்தாவரங்கள் உபமூலிகைகள் என்று அழைக்கப்படுகின்றது. அவற்றின் பணி என்று பார்த்தால், ராணியை எப்படி சிப்பாய்கள் பாதுகாக்கின்றனரே அதைப்போன்று அரிய மூலிகைச் செடியை பாதுகாக்குமாம், இதை அரியும் போது பெரும் பிரம்மிப்பாகவும், திகைப்பாகவும், அதேநேரத்தில் உள் உணர்வுக்கு ஒரு சிலிர்பும் ஏற்படுத்துகின்றது.

## மூலிகை

### நவபாஷாணம்-முருகர்

பல்வேறு சூட்சும்மான அம்சங்களின் கலவைதான் நவபாஷாணம். சராசரி மனிதர் ஒருவர் அதை கலந்து வைத்தால் நவபாஷாணம் ஆகிவிடாது. சித்தர்கள் தங்கள் சக்தி நிலையை அந்தக் கலவையில் செய்யப்பட்ட திருவுருவிற்குத் தரும்போதுதான் அது நவபாஷாணச் சிலை ஆகிறது. அத்தகைய சிலைதான் பழனியில் போகர் பிரதிஷ்டை செய்த தண்டாயுதபாணி சிலை.

முருகப்பெருமானே நேரில் தண்டாயுதபாணி திருக்கோலத்தில் காட்சிக் கொடுத்து நீ என்னை காணும் உருவிலே அவர்களுக்கு என்னை "நவபாஷாணம்" மூலம் சிலை செய்து கோயில் உருவாக்கு அவர்களும் என்னை தரிசனம் செய்ய வேண்டும் என்றாராம்.

"முருகப்பெருமான் சொன்னபடியே, நவபாஷாணம்" என்னும் ஒன்பது விதமான கூட்டுப் பொருட்களைக் கொண்டு பழனி ஆண்டவர் தண்டாயுதபாணி சிலையைச் செய்து முடித்து அவர் சொன்ன வண்ணமே பிரதிஷ்டை செய்தார் போகர்" (Kuppusamy, 2009).

போகர், மக்கள் பிணி, இறப்பு இன்றி சாவா நிலை அடையவேண்டு என்ற சீரிய கொள்கை உடையவராகவே தம் வாழ்நாள் முழுவதையும், அதற்காக எத்தனை இன்னல்கள் வந்தாலும் அவற்றை எல்லாம் கடந்து வாழ்ந்திருக்கிறார்.

மேலும், சித்தர்கள், உடம்பு என்பது மோட்சம் வீடு பேற்றிற்கான கருவி என்கின்றார்கள்.

"உடம்பார் அழியின் உயிரால் அழிவார்

திடம்ப மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேனே

உடம்மை வளர்த்தேன் உயிர் வளந்த்தேனே" (Azhagar Nambi, 2016).

என்னும் பாடல், நம் உடல் பொய் என்றும், திருமூலர் அறிவினால் அறியும் ஆன்மாவே மெய் என்றும் உரைக்கின்றனர்.

சிவ்வாக்கியார், உடலைப்பேணி இறைவனை அடைய வேண்டும் என்பது இவருடைய உயரிய சித்தனையாகும்.

"உருவிலங்கு மேனியாகி யும்பராகி நின்றநீர்

திருவிலங்கு மேனியாகச் சென்றுகூட லாகுமே" (Vadivelu Mudaliar, 1953)

திருமூலர் அன்பில் இறைவனை காணலாம் என்கிறார்.

"அன்பில் இறைவனை யாம் அறிவோம்" (Azhagar Nambi, 2016).

"நட்டகல்லை தெய்வமென்று

நாலு புட்பம் விற்றிலே

சுற்றி வந்து முணுமுணுவென்று சொல்லும்

மந்திரம் ஏதுடா?

நட்ட கல்லும் பேசுமோ

நாதனுள் இருக்கையில்"

என் கடவுள் நம் உள்ளேயே இருக்கிறார் என்று ஆணித்தரமாக சிவவாக்கியர் குறிப்பிடுகிறார்.

## சித்தர்கள் மரபில் நவபாஷாணம்

நவபாஷாணம் என்பதற்கு விஷம் என்று பொருள். இந்த விஷம் வைத்து எப்படி ஒரு சிலையை உருவாக்க முடியும். ஏனென்றால் நவபாஷாணத்தால் தமிழ்நாட்டில் பல கடவுள் சிலைகள் செய்யப்பட்டு சக்திவாய்ந்த தெய்வமாக பேர்பெற்று, மலர்களில் இருக்கும் தேனை எவ்வாறு தேனீக்கள் இடைவிடாது மொய்த்துக் கொண்டு இருக்கின்றதோ அதைப்போன்று நம்மவர்கள், நவபாஷாணத்தால் செய்த சிலை இருக்கும் இடம் ஒன்று பழனி, பழனியப்பன் உறைவிடம் அது. முருகன், தண்டாயுதபாணி உருவத்தில் எழுந்தருளியுள்ளார். அங்கு சென்று அருள் பெற்று வருகின்றனர்.

"நவ பாஷாணத்தில் என்னென்ன பொருட்கள் சேர்க்கப்படுகின்றன என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு அவற்றை ஒரு சராசரி மனிதர் கலந்து வைத்தால் அது நவபாஷாணம் ஆகிவிடாது. சித்தர்கள் தங்கள் சக்திநிலையை அந்தக் கலவையில் செய்யப்பட்ட திருவுருவிற்குத் தரும்போதுதான் அது நவபாஷாணச் சிலை ஆகிறது. அத்தகைய சிலை தான் பழனியில் போகர் பிரதிஷ்டை செய்த தண்டாயுதபாணி சிலை" (Visvasirashni, 2012). நவம் என்றால் ஒன்பது வகையான விஷம். பாஷாணம் என்ற சொல்லுக்கு பொருள் விஷம் என்பது அகராதி விளக்கம். சித்தர்கள், தாம் கற்ற கலையின் வெறிப்பாடில் உருவானது நவபாஷாணம்.

உலகின் முதல் நவபாஷாண முருகபெருமான் சிலை இருப்பிடம் பழனி. மற்றுமொரு நவபாஷாண முருகன் சிலை பூம்பாறை, கொடைக்கானலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது பூம்பாறை கிராமம். இருங்கு குடியிருக்கும் முருகனும் மிக சக்தி வாய்ந்தவர். இந்தியாவில் உள்ள இரண்டு கோவில்களில் மட்டுமே நவ பாஷாணத்தால் உருவாக்கப்பட்ட அபூர்வமான சிலைகள் உள்ளன. அவை:

1. பழனி மலை மீதுள்ள தண்டாயுதபாணி முருகன் சிலை.

2. பூம்பாறை மலையில் உள்ள குழந்தை வேலப்பர் முருகன் சிலை.

நவபாஷாண சிலையை உருவாக்கி பிரதிஷ்டை செய்தவர் மாமுனிவர் போகர் என்பது நமக்கு தெரிந்த செய்தி. பூம்பாறை முருகன் சிலையும் அவர் மூலமே உருவாகி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

நவபாஷாணத்தில் பலவகை ரசங்களுடன் வெளியே தெரியாத அபூர்வமான தீர்த்தங்களும் கலந்திருக்கும். கங்கா, யமுனா, கோதாவரி, காவிரி என்று நாமறிந்த தீர்த்தங்களிலும் அருளாற்றல் உண்டு. அதே போல கங்கையில் வந்து கலக்கிற பிரயாகைகளுக்கும் தனிப்பட்ட சக்திகள் உண்டு. சித்தர் மரபிலான பிரதிஷ்டைகளில் இவை தரமாக வந்து சேரும்.

## முடிவுரை

கடவுளைக் காண முயல்கின்றவர்களை பக்தர்கள் என்றும் கண்டு தெளிந்தவர்களைச் சித்தர்கள் என்றும் தேவாரம் பகிர்கின்றது. மூச்சினை அடக்கி யோக ஆற்றலினால் உடலில் உள்ள மூலாதாரம். தொப்பூழ். இதயம், இரப்பையின் நடுப்பகுதி, கழுத்து, தலைமுடி ஆகிய ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலினியை எழுப்பிப் பற்பல அனுபவமும் வெற்றியும் கண்டு, அப்பாலுள்ள எல்லாம் என பொருளில் நினைத்து சித்தி பெறுபவரே சித்தர் எனப்படுவர், எனும் கருத்து வழக்கமாக உள்ளது. மனித சிருஷ்டி மகத்தானது, இதன் உற்பத்தி ரகசியம் அறிந்த சித்தர்கள் மனித மனம் குறித்த மர்ம முடிச்சுகளையும் அவிழ்த்துக் காட்டியுள்ளனர். இறவா இன்பநெறி மிகந்த வாழ்வு எய்த விழைந்த அனைத்து சித்தர்களும் இப்பூவுலகின் அருளாளர்களாக எண்ணற்ற கொடையினை ஈந்துள்ளனர். அழிந்து போகக்கூடிய உடலை அழியாத கல்ப தேகமாக்கி காலம் கடந்து வாழ்ந்த சித்தர்களின் அருட்கொடையாக நமக்கு எண்ணற்ற வைத்திய நூல்களும் வாழ்க்கை நெறிகளும் அருளியுள்ளனர்,

## References


Azhagar Nambi, (2016) Thirumanthiram Moolamum Uraiyum, Kavitha Publication, Chennai, India

Jegatha, (2012) Irava varam Petra India Siddhargal, Rajamanikammal Publication, Chennai, India

Kuppusamy, S., (2009) Sanjeevi aana Siddhargal, Kallipatti, India.

Mahalakshmi, T., (2014) The principles of life shown by Thirumantram, International Institute of Tamil Studies, Chennai, India

Vadivelu Mudaliar, M., (1953) Sivakkiar Padalkal Moolamum Uraiyum, B. Rathna Nayakar and sons, Chennai, India.

Vasantha Kumar, R., (2016) Thirumoolar Aruliya Thirumanthiram, First Edition, Panniru Thirumurai Ayivu Maiam, Karpagam Academy of Higher Education, Tamil Nadu, India.

Visvasirashni, B.S., (2012) Siddhargal Arulum Sivanantham, Vijaya Publications, Coimbatore, India



## Funding

No funding was received for conducting this study.


## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License



## Cite this Article

K. Brintha, The Legacy and Noble Life of Siddhas, Indian Journal of Tamil, 3(2) (2022) 16-21. https://doi.org/10.54392/ijot2224